

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (05.09.2024) மதுரை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் நடைபெற்று வரும், சாலை மற்றும் மேம்பாலக் கட்டுமானப் பணிகளை களஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சௌ.சங்கீதா, நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அதிகாரி (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கே.ஜி.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.சரவணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### மதுரை மண்டலத்தில் நடைபெற்று வரும்

# பொதுப்பணித்துறையின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடுக!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

மதுரை, செப். 7 - பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மதுரையில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் கட்டட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, நேற்று (05.09.2024) மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, பொதுப்பணித்துறை ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைப் பார்வையிட்டு, அந்நூலகம் முறையாக பராமரிக்கப்படுகிறதா? என்பதையும், வாசகர்களிடம் போதுமான வசதிகள் உள்ளதா? என்பதையும், அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இந்நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் எண்ணிக்கை, 11 இலட்சத்தை தாண்டியதை முன்னிட்டு, அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

**பராமரிப்புப் பணிகளை விரைவுப்படுத்துக!**

அதன் தொடர்ச்சியாக, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகக் கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முதலமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட புதிய கட்டடக் கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி விரைவில் பெற்று பணிகளைத் தொடங்கவும், நடைப்பெற்று வரும் அறிவிப்பு பணிகளை துரிதப்படுத்தி முடிக்க வேண்டுமென அமைச்சர் எ.வ.வேலு உத்தரவிட்டார்.

கண்காணிப்புப் பொறியாளர்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ள மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் மற்றும் இதர கட்டடங்களை அவ்வபோது கள ஆய்வு செய்து, பராமரிப்புப் பணிகள் குறித்த விவரங்களைப் பதிவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தினார்.

மருத்துவமனைகள் மற்றும் பொது கட்டடங்களில் பெரும்பாலான மின் தூக்கிகள்(Lift) முறையான பராமரிப்பில்லாமல் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, அதனை அவ்வப்போது கண்காணித்து, பழுது நீக்கிடுமாறு கேட்டுக் கொண்டார்.

தரக்கட்டுப்பாட்டு பொறியாளர்கள், அனைத்து கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்து, தரக்கட்டுப்பாடு கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைத்து அனுமதி பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

முக்கிய திட்டப் பணிகளின் (Iconic Project) கட்டுமானப் பணிகளில் கவனம் செலுத்தவும், அறிவிக்கப்பட்ட பெரிய திட்டப் பணிகளுக்கு, நிர்வாக ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கும்போது, திட்ட உருவாக்க நிதியை பயன்படுத்தி, மண் பரிசோதனை மற்றும் இதர பணிதள ஆய்வுகள் மேற்கொண்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டுமென தெரிவித்தார்.

விரிவான மதிப்பீடு தயாரிக்கும்போது, மண் பரிசோதனை மேற்கொண்டு, உரிய அடித்தளம் வடிவமைத்தல், பயன்பாட்டு துறையிடம் உரிய ஆலோசனை மேற்கொண்டு, தேவைப்படும் வசதிகள் குறித்து, கருத்துரு பெற்று பரிசீலிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மதிப்பீட்டில், தொழிலாளர் நலநிதி, எதிர்பாரா செலவு நிதி போன்ற எல்.எஸ். இனங்களை தவிர, பிற அனைத்து இனங்களுக்கும் விரிவான மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்றும், இதனை முறையாக பின்பற்றவதன் மூலம் கூடுதல் நிதிக்காக திருத்திய நிர்வாக ஒப்புதல் (RAS) பெறுவதை தவிர்க்கலாம் என்று அறிவுரை வழங்கினார்.

**கட்டட வரைபட அனுமதி பெற வேண்டும்!**

கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான வாட்டர் ப்ரூப், எம்சாண்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்குத் தேவையான கெமிக்கல் கலவை (போஸ்ராக் நிறுவனத்தின் செபக்ஸ் 113 கலவை) போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றும், கட்டடப் பராமரிப்புப் பணிகளின்போது, தற்போது சந்தையில் நடைமுறையில் உள்ள நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், மின்பொறியாளர்கள் அவ்வப்போது, மின் அமைப்புகளை ஆய்வு செய்து, மின் கசிவு ஏற்படா வண்ணம் பராமரிக்கவும், கட்டடக் கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்குமுன், சுற்றுச்சூழல் அனுமதி, கட்டட வரைப்பட அனுமதி போன்றவற்றை பெற வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

கட்டுமானப் பணிகளின்போது, பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாத இடத்தில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, விபத்துகள் ஏற்படாத வகையில், கட்டுமானத் தொழிலாளர்கள் பாதுகாப்பு மிகவும் அவசியமாகிறது. கட்டுமானப் பணியில் ஒவ்வொரு நிலையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுகிறதா? என்பதைப் பொறியாளர்கள் கண்காணிக்க வேண்டும். பாதுகாப்பு வலை, பாதுகாப்பு பெல்ட், தலைக் கவசம், பாதுகாப்பு காலணி ஆகியவற்றை பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், முதலுதவிப் பெட்டி, தீ அணைப்புக் கருவிகள் எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கிரைன் லிப்ட் பயன்படுத்தும் போது, துல்லியமான தகவல் பரிமாற்றம் மிகவும் அவசியம். பாதுகாப்பற்ற குறுக்கு வழிகளைப் பின்பற்றக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

**காலதாமதம் கூடாது!**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனை கட்டுமானப் பணிகள் மற்றும் மதுரை திருமலை நாயக்கர் மஹால், மதுரை காந்தி அருங்காட்சியகம் போன்ற பாரம்பரியக் கட்டடங்கள் புனரமைக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொன்றாக ஆய்வு செய்த அமைச்சர், இப்பணிகளில் காலதாமதமின்றி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனை கட்டுமானப் பணிகளின் போது, ஏற்பட்ட விபத்துக் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, கேட்டறிந்து இத்தகைய விபத்துகள் இனி ஏற்படாத வகையில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் செல்வராஜ், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி.எம். இளவெண்மால் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு ஒன்றிய திமுக சார்பாக கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், வருகிற ஒன்பதாம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்து விழாவில் பங்கேற்பது மற்றும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில், ஒன்றிய செயலாளர் ச.தனசேகர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், ஒன்றிய செயலாளர் தன்ராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள் இளங்கோவன், மருதுராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திரளான பொது உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் , நெமிலி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், அ.அசோகன், மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம் ஒன்றிய கழக அவைத்தலைவர் புருஷோத்தமன், ஒன்றிய கழக செயலாளர் பெ.வடிவேலு, மாவட்டமகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு, தலைமைச் பொதுக்குழு உறுப்பினர் அ.அப்துல் நசீர், ஒன்றிய துணைச் செயலாளர்கள் பாரதி ஜெயச்சந்திரன், முகமது அப்துல் ரகுமான், ஒன்றிய பொருளாளர் சங்கர், மாவட்ட பிரிதிநிதி பெருமாள், அரிகிருஷ்ணன், விநாயகம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் சிவா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தொண் போஸ்கோ மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘முதல் மொழி’ அமைப்பின் சார்பில்

# ‘நீட் - ஓர் கல்விசார் எதேச்சதிகாரம்’ - கருத்தரங்கம்!

## கே.அசோக் வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) தலைமை!

சென்னை, செப்.7 - அண்ணாமலை பல்கலைக் கழக முன்னாள் பொறியாளர்கள், மாணவர்கள் சங்கம் மற்றும் அகில இந்திய கல்வி பாதுகாப்புக் குழு இணைந்து செயல்படும் முதல் மொழி அமைப்பின் சார்பில் ‘நீட் ஓர் கல்வி சார் ஏதேச்சதிகாரம்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று 16.9.2024 அன்று மாலை 4 மணியளவில் கோட்டூர்புரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் இரண்டாம் மாடியில் நடைபெறுகிறது.

இந்திய கடல்சார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கே.அசோக்வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) தலைமை விருந்தினராகப் பங்கேற்றுப் பேசுகிறார்.

பொறியாளர் ஏ.எல்.எம். அவிச்சி வரவேற்கிறார். பொறியாளர் எம். சதாசிவம் தலைமை வகிக்கிறார்.

கருத்தரங்கிற்கு தலைமையேற்று டாக்டர் எல்.ஜவஹர் நேசன் பேசுகிறார்.

எஸ். சசிகாந்த் செந்தில் எம்.பி., டாக்டர் காசி, டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ., டாக்டர் புஷ்பிந்தர் சிங்,

டாக்டர் விபூதி வெங்கடேஸ்வரலு, பேராசிரியர் கே.யோகராஜன் உள்ளிட்ட வல்லுநர்கள் உரையாற்றுகின்றனர்.

டாக்டர் சிவ ஒளி நன்றி கூறுகிறார்.

### நெல்லை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில்

# சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வுக் கூட்டம்! எஸ். காந்திராஜன் தலைமை!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் கோரிக்கை மனு வழங்கினார்!

நெல்லை.செப்.7.- நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 4.9.2024 அன்று சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வு கூட்டம் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதை நிறைவேற்றிட பரிந்துரை செய்திட வேண்டி கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

கடந்த 2013 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நான் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சராக இருந்தபோது சுமார் 6 ஏக்கரில் 60 லட்சம் மதிப்பீட்டில் மினி விளையாட்டரங்கம் துவங்கப்பட்டது. அதன் பின் மேற்படி விளையாட்டரங் கத்தை எந்தவித பராமரிப்புமின்றி மிகவும் பழுது அடைந்துள்ளது. மேற்படி விளையாட்டரங்கத்திற்கு தேவையான கோரிக்கையை இத்துடன் இணைத்துள்ளேன் எனவே மேலப்பாளையம் மினி விளையாட்டு அரங்கை செப்பனிட்டு தர பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

நான் குடியிருக்கும் 16 வது வார்டு பகுதியில் உழவர் சந்தை உள்ளது. அதே போல் அந்த வளாகத்தில் கண்டிகைபேரி அரசு மருத்துவமனை, முதியோர் இல்லம்,அங்கன்வாடி மையம், பூங்கா என பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லக்கூடிய பகுதியாக உள்ளது. அதைப்போல தற்போது அந்த வளாகம் சுகாதாரமற்ற முறையில் இருந்து வருகிறது.இரவு நேரங்களில் சமூக விரோதிகள் கூடி அசுத்தம் செய்து வருகிறார்கள். மேலும் டவுன் பகுதியில் வாழும் பொதுமக்கள் வாகனங்களை முழுமையாக நிறுத்தி உள்ளனர். அதனால் பொதுமக்கள் சிலர் வருவதற்கு மிகவும் இடையூறாகவும் அச்சப்படும் சூழ்நிலை உள்ளது. அதேபோல் தெரு நாய்கள் தொந்தரவு அதிகமாக உள்ளது.எனவே மேற்படி பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக பராமரித்து உழவர் சந்தையை மேம்படுத்த பொது மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாநகரப் பகுதியில் குடியிருப்புக்கு நடுவில் ஓடக்கூடிய பாளையங் கால்வாய் மற்றும் திருநெல்வேலி கால்வாய் ஆகிய இரண்டும் விவசாயத்துக்காக பயன்படுத்தக்கூடிய கால்வாயாகும். தற்போது அந்த கால்வாயில் பொது மக்கள் குப்பைகளையும், கழிவுகளையும் கொட்டி தண்ணீர் போக்கின்றி அடைப்புகள் ஏற்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது.இதனால் விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே விவசாயிகள் நலன் கருதி நகப்பகுதியில் மட்டும் மேற்படி கால்வாயில் சிமெண்ட் தளம் அமைத்து செப்பனிட்டு தர விவசாயிகள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

பாளை குலவணிகர்புரத்தில் திருச்செந்தூர்நெல்லை ரயில் பாதை குறிப்பிடுகிறது. இந்த ரயில் பாதையை கடந்து தான் திருச்செந்தூர் தூத்துக்குடி இருந்து வரும் அரசு,தனியார் பஸ்கள் அனைத்தும் மத்திய சிறைச்சாலை வழியாக நெல்லை வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையம் செல்ல வேண்டும்.மேலும் பாளையங்கோட்டை ஊருக்கு இருந்து கன்னியாகுமரி, நாகர்கோவில் செல்லும் வாகனங்கள் இந்த ரயில்வே கேட்டை கடந்து தான் செல்ல வேண்டும்.அது மட்டுமல்லாது தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்தும் சேரன்மகாதேவி,அம்பாசமுத்திரம் செல்ல வேண்டிய கனரக வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் இந்த ரயில்வே கேட்டை கடந்துதான் வலப்புறம் திரும்பி மேலப்பாளையம், அம்பை சாலையில் பயணிக்க வேண்டும். பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஆக்ஸ்போடு என அழைக்கப்படுகிறது.

இதனால் முன்னீர்பள்ளம்,கருங்குளம் மேலப்பாளையத்தில் இருந்து பாளையங்கோட்டையில் ஆயிரக் கணக்கான மாணவ, மாணவிகள் தினமும் இந்த ரயில்வே கேட்டை கடந்து தான் பள்ளி கல்லூரிக்கு சென்று வருகின்றனர். திருச்செந்தூர் செல்லும் ரயில் கடந்து செல்லும்போது இந்த ரயில்வே கேட் அடைக்கப்படுவதால் பாளையிலிருந்து செல்லும் வாகனங்களும், அம்பை மேலப்பாளையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் இருந்து தூத்துக்குடி, திருச்செந்தூர் செல்லும் வாகனங்களும் இருபுறமும் நீண்ட தூரம் அணிவகுத்து நிற்கும். கேட் திறக்கப்பட்டதும் இச்சாலையில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.இதை கருத்தில் கொண்டு கடந்த 20062011 தி.மு.க ஆட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது பாளை குலவணிகர்புரம் ரயில்வே கேட்டில் Y வடிவ மேம்பாலம் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டது. அதாவது

முருகன்குறிச்சி பாளை பேருந்து நிலையத்தை கடந்து நாகர்கோவில் செல்லும் வாகனங்கள் ரயில்வே கேட்டை கடந்து நேரடியாக பயணிக்கவும் மேலப்பாளையம் வழியாக அம்பாசமுத்திரம் உள்ளிட்ட செல்லும் வாகனங்கள் மேம்பாலத்தில் இருந்து வலது புறம் திரும்பி மேலப்பாளையம், அம்பை சாலையை இணைத்து பயணிக்கும் வகையிலும் ஒய் வடிவ மேம்பாலம் அமைக்க தீர்மானிக்கப் பட்டது.

இந்த மேம்பாலத்திற்கு தற்போதைய முதல்வரும் 2010 ஆம் ஆண்டு துணை முதல்வராக இருந்தபோது அம்பாசமுத்திரத்தில் நடந்த அரசு விழாவில் அடிக்கல் நாட்டினார்கள்.

மேம்பாலம் பணிகள் தொடங்கும் முன்பாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் இந்த பணிகள் கடந்த 10 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டது.2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தமிழ்நாடு முதலமைச்சராக கழக தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதும் பாளை குலவணிகர்புரத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்தது.

இந்நிலையில் பழைய ஒய் வடிவ மேம்பாலம் திட்டத்தை மாற்றிவிட்டு தற்போதைய புதிதாக ரயில்வே கேட்டை கடந்து நேரடியாக புதிய பேருந்து நிலையம்,நாகர்கோவில் செல்லும் வகையில் மேலப்பாளையம், அம்பை சாலையை மறந்து ஒரு வழியாக மட்டும் மேம்பாலத்திற்கு நெடுஞ்சாலை துறையால் திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது.

இந்த முறையில் ரயில்வே மேம்பாலம் அமைப்பதால் எந்த வகையிலும் பயன்தராது.கூடுதலாக தான் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும். வரும் காலங்களில் இன்னும் வாகன பெருக்கம் அதிகரிக்கும்.எனவே மேலப்பாளையம், அம்பை சாலையை இணைத்து ஒய் வடிவ மேம்பாலம் அமைக்க, வேண்டுகோள் எழுந்துள்ளது. எனவே மேற்படி கோரிக்கையை பொது மக்கள் சார்பாக நிறைவேற்றி தர கேட்டுக் கொள்கிறேன்.

மனுவில் இணைத்துள்ள முறப்பநாடு குடிநீர் திட்டங்கள் கோரிக்கையானது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. இதனை உடனடியாக நிறைவேற்றி தர பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை ஏற்பாட்டில் எரசக்கநாயக்கனூரைச் சேர்ந்த இளைஞர்கள் 100க்கும் மேற்பட்டோர் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.